



தமிழ்நாடு அரசு

## வேளாண்மைத் துறை

# "உழவன்" கைபேசி செயலி



# மின்னணு வேளாண்மை

# - ஒரு கண்ணோட்டம்

மின்னணு வேளாண்மையில் தமிழகம், அகில இந்திய அளவில் முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது

தமிழக அரசின் வேளாண்மைத் துறையினால் 2010ஆம் ஆண்டில், விவசாயிகளுக்கு வேளாண் தகவல் சேவை வழங்குவதற்காக ***tnagrisnet* (*www.tnagrisnet.tn.gov.in*)** என்ற இணைய தளம் துவங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

தேசிய அளவில் முதன் முறையாக 70 இலட்சம் விவசாயிகளின் அடிப்படை தகவல்கள், பண்ணை மற்றும் மண் வளம் சார்ந்த தகவல்கள் வலை தளத்தில் உள்ளீடு செய்யப்பட்டு, அதற்கான ஆலோசனைகள் மற்றும் வேளாண் இடுபொருட்கள் இத்துறையினால் வழங்கப்பட்டு வருகிறது.

இந்தச் சேவையை பாராட்டி மத்திய அரசு, இரண்டு முறை தமிழ்நாட்டிற்கு தேசிய மின் ஆளுமை திட்டத்தின்கீழ் தங்க விருதும், ரூபாய் இரண்டு இலட்சம் ரொக்கப் பரிசும் வழங்கி கௌரவித்தது. மேலும், ஸ்கோட்ச் ***(Skoch)*** நிறுவனத்தின் உயரிய விருதான பிளாட்டினம் விருதும் வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மைத்துறையில் மின்னணு தொழில்நுட்பத்தின் அடுத்த கட்டமாக வேளாண் துறை சார்ந்த செயல்பாடுகள் மற்றும் தகவல்கள் அனைத்தும் விவசாயிகளிடம் விரைவில் சென்றடைவதற்காக “உழவன்” என்ற கைபேசி செயலி தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் செயல்படுத்தப்படவுள்ளது.

இந்த செயலி மூலம் விவசாயிகளுக்கு ஒன்பது முக்கிய அடிப்படை சேவைகள் வழங்கப்படவுள்ளன.